**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure.)**
**------**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

| | |
|---|---|
| **Calender** | **CC.175/2021** |
| **Miscellaneous** | |
| **Preliminary Register** | |
| **Sessions** | |
| **Deposition of witnesses for** | PW - 1 |

| | | |
|---|---|---|
| **Name** | **:** | காண்டியம்மாள் |
| **Father's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act II of 1873 of the day of 23-08-2022**

**முதல் விசாரணை**

நான் கழுவாய் அம்மாள் என்பவருக்கு வாய்க்கரலாக பேசி நிலத்தை கிரையம் வாங்க சுமார் 20 வருடங்களுக்கு முன்பு செண்ட்டிற்கு ரூபாய் 5000/- வைத்து 7 1/2 செண்ட்டிற்கு ரூபாய் 37,500/- கொடுத்திருந்தேன். கிரையம் முடிக்க சென்ற போது கழுவாய் அம்மாளின் பேரன் விபத்து ஒன்றில் இறந்து விட்டார். அதனால் பத்திரம் முடிப்பதற்கு சங்கட பட்டு விட்டு கிரையம் முடிக்காமல் இருந்து விட்டேன் . இந்நிலையில் மேற்படி நிலத்தில் 4 1/2 செண்ட்டை கழுவாய் அம்மாளிடம் மணிகண்டன் என்பவர் மோசடியாக பத்திரம் பதிந்து கிரையம் முடித்து கொண்டார். பணத்தை நான் செலுத்த கிரையத்தை அவர்முடித்து கொண்டார். பத்திரம் முடித்த பிறகு என்னிடம் அந்த பத்திரத்தை காட்டவில்லை. எனக்கு பாத்தியப்பட்டிருந்த 3 ஏக்கர் நிலத்தை விற்று 7 1/2 செண்ட் நிலத்தில் வீட்டை கட்டுவதற்காக தொடர்ந்து கட்டி முடித்து விட்டேன். மணிகண்டன் கிரையம் முடித்த 4 1/2 செண்ட் நிலத்தில் தான் மேற்படி நான் கட்டிய வீடு உள்ளது. மேற்படி வீட்டில் மணிகண்டனின் மகள் வயதுக்கு வந்துவிட்டதால் நாங்கள் அனைவரும் கூட்டு குடும்பமாக அதே வீட்டில் இருந்தோம். அவர் என்னை வீட்டை விட்டு வெளியே போக சொன்னார். என்னை அடித்து வீட்டை விட்டு வெளியே துரத்தி விட்டார்கள்.

எனக்கு பிரசர் கூடி பேச்சு மூச்சு இல்லாமல் கிடந்தேன். என்னுடைய மகனான மணிகண்டன் என்னை கம்பால் முழுங்கையில் அடித்து விட்டார். மற்ற மகன்கள் வந்து ஏண்டா கிழவியை அடித்தாய் என்று கேட்டார்கள். ஆம்புலன்சை வரசொல்லி என்னை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அங்கு கொரனா காலமாக இருப்பதால் வேறு பிரச்சினை இல்லை என்று வீட்டிற்கு அழைத்து செல்லுங்கள் என்று கூறினார்கள். நான் தற்போது ஓட்டு வீட்டில் வசித்து வருகிறேன். அதையும் குடித்து விட்டு உடைத்து விட்டார். நான் இடம் விற்ற பணத்தில் பாண்டியன் கிராம பேங்கில் வைத்து சிறுக சிறுக எடுத்துக் கொடுத்தேன். எதிரி மணிகண்டன் நான் மேற்படி பணத்தை எடுக்க உதவி செய்தார். எதிரி மீது நடவடிக்கை எடுக்க இந்த புகாரை தாக்கல் செய்தேன். 1ம் எதிரி பேரில் உள்ள கிரைய பத்திரம் கணினி வழி நகல் அ.சா.ஆ.1 ஆகவும், வாதி வங்கி கணக்கு விபரங்கள் அசலுடன் சரிபார்க்கபட்டது அ.சா.ஆ.2 முதல் 4 ஆகவும், மாண்புமிகு முதல்வருக்கு அனுப்பிய புகார் அ.சா.ஆ.5 ஆகவும், திருமங்கலம் அரசு வெளி நோயாளியாக சிகிச்சை பெற்றதற்கான ரசீது அ.சா.ஆ.6 ஆகவும், கோட்டாட்சியரிடம் கொடுத்த புகார் அ.சா.ஆ.7 ஆகவும், திருமங்கலம் வட்டசட்டப்பணிகள் குழு புகார் அ.சா.ஆ.8 ஆகவும், அங்கிருந்து வரப்பெற்ற அறிவிப்பு அ.சா.ஆ.9 ஆகவும், மாவட்ட ஆட்சிதலைவரிடம் கொடுத்த மனுவிற்கு நடவடிக்கை எடுக்க வந்த அறிவிப்பு அ.சா.ஆ.10 ஆகவும், காவல் உதவி ஆய்வாளருக்கு கொடுத்த இணைய வழி புகாரின்அசல் அ.சா.ஆ.11 ஆகவும், இந்நீதிமன்றத்திற்கு தபாலில் அனுப்பி வைக்கப்பட்ட புகார்அ.சா.ஆ.12 ஆகவும் பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**எதிரி தரப்பில் கு.வி: இல்லை**